

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, நாடாளு மன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, கலாநிதி வீராசாமி, து. மு. கதிர் ஆனந்த், தே. மலையரசன், அருண் நேரு ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

# நெல்லை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி கூட்டம்!

## அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா சிறப்புரை!

நெல்லை, ஜன.2-

தி.மு.க.தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் நெல்லை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி ஆய் வுக்கூட்டம் மற்றும் ஆலோ சனைக் கூட்டம் பாளை அன்னை மகாலில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் தி.மு.க.தக வல் தொழில் நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்றார்.

பின்னர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா செய்தியா ளர்களிடம் தெரிவித்த தாவது.

தி.மு.க.வின் தகவல் தொழில்நுட்ப அணி வரும் ஆண்டின் முதல் மூன்று மாதத்திற்குள் மிகப்பெரிய பரிமாண வளர்ச்சியை அடைய உள்ளது. லட்சக்க ணக்கான இளைஞர்களை கழகத்தின் ஐடி வங்கியில் சேர்க்க உள்ளோம்.மத்திய அரசின் மிகப்பெரிய அறிவி யல் ஆய்வு நடத்தும் நிறுவனமான அறிவியல் மற் றும் தொழிலக ஆய்வு மன் றம் (சி.எஸ்.ஐ.ஆர்.) மூலம் புதிய ஆராய்ச்சிகள் புதிய முயற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. திருவனந்த புரத்தில் உள்ள சி.எஸ்.ஐ. ஆர்.நிறுவனத்தை நேரில் சென்று ஆய்வு மேற் கொண்டோம். அங்கு மிகப் பெரிய ஆராய்ச்சிகள் தற் போது நடந்து வருகிறது. தமிழகத்திற்கு மிகப்பெரிய திட்டங்களையும் புதிய ஆராய்ச்சிகளையும் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் அதிகாரி களுடன் சென்று அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட் டது.ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் உலகின் தலைமையகமாக தமிழ கத்தை மாற்ற வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொண்டு வரு கிறார்கள்.சி.எஸ்.ஐ. ஆர். நிறுவனத்தை தமிழகத்தில் தொடங்குவதற்கான பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

சிப்காட் நிறுவனத்தின் மூலம் அதற்கான இடம் வழங்கப்பட உள்ளது அந்த நிறுவனம் தொடங்குவதற் கான அறிவிப்பு முதலமைச் சர் அவர்களால் விரைவில் வெளியிடப்படும்.தமிழகம் எங்கும் மிகப்பெரிய வளர்ச் சியை தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து சேர்த்துள்ளார்கள்.தென்த மிழகம் மிகப்பெரிய வளர்ச் சியை அடைந்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத் தில் வின் பாஸ்ட் நிறுவனம் கொண்டுவரப்பட்டுள்ளது நெல்லை மாவட்டம் கங் கைகொண்டானில் டாடா,சோலார் போன்ற நிறுவனங்கள் வந்துள்ளது. இன்னும் பல நிறுவனங்கள் தமிழகத்திற்கு வரவுள்ளது. நாங்குநேரி பகுதிக்கு மிகப் பெரிய விடியலை தர வேண்டும் என தொடர் முயற்சிகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகி றது. நாங்குநேரி பொருளா தார மண்டலத்தில் தொழில் நிறுவனங்கள் கொண்டு வருவதற்கான சட்ட சிக்கல் கள் ஒன்றிய அரசிடம் உள்ளது.

இரண்டு வாரத்திற்கு ஒருமுறை டெல்லிக்கு சென்று அந்த பிரச்சினையை முடிப்பதற்கான பணிகளை தொழில்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகிறார் கள். திருநெல்வேலி மாவட் டத்தில் மிகப்பெரிய வளர்ச் சியை கொண்டு வருவதற்கு தி.மு.க.அரசு நிச்சயம் உதவி செய்யும் அதற்கான முயற் சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித் தார்.

# கும்பகோணத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் - விளையாட்டுப் போட்டி!

## அமைச்சர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தொடங்கி வைத்தனர்!

தஞ்சாவூர் ஜன.2-

கும்பகோணத்தில் வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஒற்றை யர் மற்றும் இரட்டையர் இறகு பந்து போட்டியை மாநிலங்களவை உறுப்பி னர் தொடங்கி வைத்தார்.

கும்பகோணத்தில் வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஒற்றை யர் மற்றும் இரட்டையர் இறகு பந்து போட்டி ஏ. ஆர்.ஆர். மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் நடை பெற்றது. இந்த போட் டியை மாநிலங்களவை உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான சு.கல்யா ணசுந்தரம், உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி செழியன் துவக்கி வைத்த னர். இந்நிகழ்ச்சியில் முன் னாள் மயிலாடுதுறை பாரா ளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக் கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட அவைத் தலைவர் க.நசீர் முகமது, ஒன்றிய செயலா ளர்கள் உள்ளூர் டி.கணே சன், எஸ்.கே.முத்துச் செல் வம், கூகூர் சி.அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜி.கே.எம். ராஜா, மாவட்ட விளை யாட்டு அணி அமைப்பா ளர்கள் வீ.சிவகுமார், துணை அமைப்பாளர்கள் வசந்தராஜ், சுவாமிநாதன், ஸ்டாலின், ஸ்ரீராம், சங்கர், மற்றும் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உள் ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் 10 வயது முதல் 19 வயது வரை ஐந்து பிரிவுகளாக நடை பெற்றன.

இதில் தஞ்சை மாவட் டத்திலிருந்து 300-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். போட்டி யில் வெற்றி பெறும் நபர்க ளுக்கு முதல் பரிசாக ரூ.3000, இரண்டாம் பரி சாக ரூ.2000, மூன்றாம் பரி சாக ரூ.1000 வழங்கப்பட் டது. கலந்து கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசும் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

### மணிப்பூரில் மீண்டும் வன்முறை:

# பிரதமர் மோடி மன்னிப்பு கேட்க வேண்டும்!

## காங்கிரஸ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜன.2-

மணிப்பூர் விவகாரங் களுக்காக அம்மாநில முதல் மந்திரி பிரேன் சிங் மன் னிப்பு கேட்டிருக்கும் நிலை யில், பிரதமர் மோடியும் மன்னிப்பு கேட்க வேண் டும் என்று காங்கிரஸ் கட்சி யின் ஊடகப் பிரிவு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கேள்வி எழுப்பி யுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், “பிரதமர் மோடி மணிப் பூருக்குச் சென்று அம்மக்க ளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் மே 4, 2023 முதல் அவர் நாடு மற்றும் உலகம் முழுவதும் ஜெட் விமானத்தில் பயணம் செய் தபோதும் அவர் வேண்டு மென்றே அம்மாநிலத்துக்கு வரு வதைத் தவிர்த்தார். மணிப்பூர் மக்களால் இந்தப் புறக்கணிப்பை புரிந்து கொள்ள முடியாது” என்று பதிவிட்டுள்ளார்.

**மணிப்பூரில் குண்டுவெடிப்பு**

இந்நிலையில் மணிப்பூர் முதல்வர் மன்னிப்பு கேட் டுக் கொண்டிருக்கும் நிலை யில் மீண்டும் மணிப்பூரில் குண்டு வெடித்தது.

இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.


